# 7 அர்த்தமுள்ள நற்செய்திப் பணி செய்தல்

**மத்தேயு 10 : 5 -15**

இயேசு தமது பணியைப் பரப்புவதற்காகப் பன்னிரு சீடர்களைத் தெரிவு செய்தார். அவர்களிடம் பிரதானமாக நற்செய்திப் பணியை எதிர் பார்த்தார். அவர்களை அதற்காக அனுப்பும் வேளையில் இயேசு கூறியவற்றையும் இயே சுவைப் பின்பற்றி வாழும் எமக்கு கிடைக்கும் முன் மாதிரியையும் இப்பாடத்தில் கற்போம்.

இயேசுவின் புனித நற்செய்தியை மக்களுக்குக் கொண்டு செல்லுதல் நற்செய்திப் பணி எனக் கருதப்படுகின்றது. இயேசுவின் சீடர்களுக்கு நற்செய்திப் பணிக்கான இயேசுவால் வழங்கப்பட்ட வழிகாட்டல்கள் நற்செய்தி நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இயேசு வின் நற்செய்தியைப் போதித்தல், நோயாளரைக் குணப்படுத்தல், தீய ஆவிகளைத் துரத்துதல், மரித்தோரை எழுப்புதல் போன்ற செயல்களில் சீடர்கள் வல்லமையும் அனுபவமும் பெற்றனர். பன்னிரு சீடர்கள் வலுவூட்டப்பட்டு நற்செய்திப் பணிக்காக இயேசுவால் அனுப்பி வைக்கப்பட்டனர்.

### நற்செய்திப் பணிக்கு அனுப்புதல் (மத்தேயு 10:5 - 6 )

இந்தப் பணியானது முதலாவது பிற இனத்தோருக்கும் சமாரியருக்கும் அன்றி வழி தவறிப் போன இஸ்ரயேல் மக்களுக்கு என இயேசு கூறினார். (மத்தேயு 10: 6) இயேசுவும் பன்னிரு சீடர்களும் முதலாவதாக இஸ்ரேயலருக்கு நற்செய்தியை அறிவித்து, அவர்கள் இயேசுவை ஏற்று, மீட்பை அடைந்த பின்னர் உலகில் அனைத்து இனங்களுக்கும் அதன் ஆசியைப் பரப்புதல் இறை விருப்பு ஆகும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

### நற்செய்திப் பணியின் பிரதான செய்தி (மத்தேயு 10:7 - 8 )

''விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது'' என இயேசு கூறி மக்களை அழைக்கும் மகத்தான பொறுப்பை சீடர்களிடம் ஒப்படைத்தார். மனம்திரும்பி விண்ணரசின் பெறுமதியை உணர்த்தும் வண்ணம் மக்களை அழைக்கும் பணி சீடர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இயேசு அந்தப் பணியில் சீடர்களை ஈடுபடுத்தினார்.

### நற்செய்திப் பணியின் சிறப்பான பொறுப்புக்கள் (மத்தேயு 10:8)

தீய ஆவிகளை விரட்டவும், நோய் நொடிகளைக் குணமாக்கவும் இறந்தோர் உயிர் பெறவும் அவர்களுக்கு அதிகாரம் அளித்தார். (மத்தேயு 10.1) இயேசு இறையருள், இரக்கம், வல்லமை என்பனவற்றை வழங்கினார். நற்செய்திப் பணி மூலமாகப் பெற்ற ஆசியை பிறர் நன்மைக்காகப் பகிரவேண்டும் என இயேசு சீடர்களிடம் எதிர்பார்த்தார். மனிதருக்கு நோயிலிருந்து ஆறுதல், விடுதலை வழங்கல், வாழ்வளித்தல் போன்ற இயேசுவின் பணிகளைப்போன்று சீடர்களின் நற்செய்திப் பணிகளிலும் இவை பிரதான இடம் வகித்தன.

### நற்செய்திப் பணிக்கான அறிவுறுத்தல் (மத்தேயு 10:9-11 )

நற்செய்திப் பணிக்காக சீடர்களை அனுப்பும் வேளையில், பொன், வெள்ளி, செப்புக்காசு எதையும் கொண்டு செல்ல வேண்டாம். காசுப்பை, இரண்டு அங்கிகள், மிதியடிகள், கைத்தடி எடுத்துச் செல்ல வேண்டாம் என சீடர்களுக்கு அறிவுறுத்தினார். உங்களை ஏற்கத் தகுதி உடையவர்களின் தேவையை நிறைவேற்றுங்கள் என்றார். உலக காரியங்களில் நின்று விடாது முழுமையாக இறை வழிகாட்டலை நாடுமாறு பணித்தார். எளிமையான வாழ்வின் முன்மாதிரியுடன் நற்செய்தி அறிவித்தல் பணியின் முக்கியத்துவத்தை இயேசு வெளிப்படுத்தினார்.

### நற்செய்திப் பணியின் சிக்கல்கள் (மத்தேயு 10.12-15)

விண்ணரசின் செய்தியை ஏற்காது உங்களை ஏற்க தகுதியற்றவர்களுக்கு உருவாகும் நிலையை இயேசு அறிவித்தார். அவர்களுக்குச் சமாதான வாழ்த்து கிடைக்காது, கால் தூசியை உதறிவிடுதல் என்பது வரவிருக்கும் இறை தீர்ப்பாகும். இறை மகனை மறுப்பவர்களுக்கு கிடைக்கும் தண்டனை பாரதூரமானது எனவும் தீர்ப்பு நாளில் சோதோம், கொமோரா நகர்களின் உதாரணம் மூலமாக உறுதிப்படுத்தினார்.

இவ்வாறு பன்னிரு சீடர்களும் இயேசுவின் நற்செய்திப் பணியைப் பரப்பியது போன்று நாமும் எம்மால் முடியுமான வரையில் வாழும் சமூகத்திலும் வாழும் உலகிலும் நற்செய்திப் பணியில் ஈடுபடுவோம்.

**செயற்பாடு**

1. நற்செய்திப் பணியாளராக நீர் பணி செய்யக் கூடிய சந்தர்ப்பங்கள் 5 குறிப்பிடுக.
2. நற்செய்திப் பணியில் பின்பற்ற வேண்டிய வழிகாட்டல் மாலை தயாரித்து ஒழுங்குபடுத்துங்கள்.
3. அண்மைக் காலத்து நற்செய்திப் பணியாளரின் வாழ்க்கைக் கதையை உமது மொழி நடையில் எழுதுக.